

நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினர்.



மாஸ்டர்ஸ்கில் தாதியர் தின விழாவில் மாணவர்களின் படைப்பு.

# மாஸ்டர்ஸ்கில் கல்லூரி சுகாதார அறிவியல் பல்கலைக்கழகமாக மாற்றம் காண வேண்டும்

## உயர்கல்வி துணையமைச்சர் டத்தோ இட்ரிஸ் ஹருண் வலியுறுத்து




அதிகாரத்துவ அழைப்பை மாஸ்டர் ஸ்கில் தலைவர் ராஜா டத்தோஸ்ரீ ஹசுரீன் சுல்தான் ஹஸ்லான் ஷாவிடம் உயர்கல்வி துணையமைச்சர் டத்தோ இட்ரிஸ் ஹருண் வழங்குகிறார்.

நா.ஸ்ரீவிக்னேஷ்–படங்கள்: இரா.காந்தன்

**செராஸ், மே 23-**

**மாஸ்டர்ஸ்கில் கல்லூரி விரைவில் சுகாதார அறிவியல் பல்கலைக்கழக கல்லூரியாக உயர்வு காணவேண்டும். சுகாதார அறிவியல் பல்கலைக்கழக கல்லூரியாக மாஸ்டர்ஸ்கில்லின் அந்தஸ்து உயர்வதன் வழி மாணவர்களும் பொது மக்களும் அதிக நன்மை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று உயர்கல்வி**

புதன்கிழமை செராஸ் மாஸ்டர்ஸ்கில் கல்லூரியில் நடைபெற்ற தாதியர் தின விழாவை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்து அவர் பேசினார்.

அதோடு இங்கு படிக்கும் மாணவர்கள் தங்களின் கல்வி நிலையை டிப்ளோமா தகுதியோடு நிறுத்தி விடாமல் தொடர்ந்து பட்டப் படிப்பு போன்ற கல்வியையும் தொடர மாணவர்கள் தவிர்க்க வேண்டும்.

எதிர்கால வாழ்க்கையை மனதில் வைத்துக் கொண்டு மாணவர்கள் கல்வியில் நாட்டம் செலுத்தினார்கள் என்றால் நிச்சயமாக ஒவ்வொரு மாணவரும் சிறந்த மாணவராக உரு வாக முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வுக்கிடையே மாஸ்டர்ஸ்கில் கல்லூரியும் தேசிய சிறுநீரக அறவாரிய மும் உயர்கல்வி துணையமைச்சர் டத்தோ இட்ரிஸ் ஹருண் முன்னிலை யில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டன.

அதோடு டத்தோ இட்ரிஸ் ஹருண் செராஸ் மாஸ்டர்ஸ்கில் பல்கலைக்கழக கல்லூரியாக தரம் உயர்த்துவதற்கான அதிகாரத்துவ அழைப்பை மாஸ்டர் ஸ்கில் தலைவர் ராஜா டத்தோஸ்ரீ ஹசுரீன் சுல்தான் ஹஸ்லான் ஷா மற்றும் மாஸ்டர்ஸ்கில் தலைமைச் செயல் அதிகாரி எட்மன்ட் சந்தாரா ஆகியோரிடம் சமர்ப்பித்தார்.



மாஸ்டர்ஸ்கில் தலைமை நிர்வாக அதிகாரி எட்மன்ட் சந்தாரா தேசிய சிறுநீரக அறவாரியத் தலைவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தப் பத்திரத்தை பரிமாற்றம் செய்கிறார்.



தாதியர் தின உறுதி மொழி எடுக்கப்படுகிறது மற்றும் முக்கிய பிரமுகர்கள்